யாழ்ப்பாணம்

# புலிகள் தடை விவகாரம் ; இலங்கையின் கருத்துக்கு

விலை ரூபா 5.00

யாழ்ப்பாண பொதுநூலகம்

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 10 இதழ் 102

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23 — 05 — 1992

## இந்தியா கண்டனம்

(புதுடில்லி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடைசெய்திருப்பது ஓர் அடையாள நடவடிக்கை என இலங்கை அரசு கூறியிருப்பதை இந்திய அரசு கடுமையாகக் குறைகூறியுள்ளது.

மேலும் இதுபோன்ற தவறான கருத்துக்களை வெளியிடுவதில் இலங்கை அரசு ஈடுபடக்கூடாதென இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவும் இலங்கையும் சொற் போர்

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்ததன் மூலம் இலங்கைக்கும் — இந்தியாவுக்குமிடையில் தற்போது முறுகல்நிலை ஏற்பட்டு வருவதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு மாதத்தில் இந்திய — இலங்கை மூத்த அரசியல்வாதிகள் ஒருவருடன் ஒருவர் சொற்போர் தொடுத்தது இது இரண்டாவது தட

(4ம் பக்கம் பார்க்க)

# வற்றுப்பளை அம்மன் கோயில் தாக்குதலை விசாரிக்க

# சிறப்புவிசாரணைக்குழு நியமிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு வற்றுப்பளை அம்மன்கோயில் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த திங்கட்கிழமை மேற்கொண்ட ஷெல் தாக்குதல் குறித்து விசாரிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் சிறப்பு விசாரணைக்குழு ஒன்றை நியமிக்கவுள்ளது. இந்த விசாரணைக்குழுவில் மூன்றுபேர் அங்கம் வகிப்பார்கள்.

இந்த விசாரணைக்குழுவுக்கு நீதியரசர் டி. ஜி. ஜயலத் தலைவராக நியமிக்கப்படுவார். மேஜர்ஜெனரல் வைட் பாலரட்ணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் மஜீத் ஆகியோர் இந்தக்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர். வெளிவிவகார அமைச்சு இந்த விசாரணைக்குழுவின் விபரம் பற்றி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வற்றுப்பளை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவத்திற்கு கூடியிருந்த பக்தர்கள்மீது

[4ம் பக்கம் பார்க்க]

## குண்டுவீச்சு விமானங்கள் திருமலைபகுதியில் தாக்குதல்

(திருமலை)

திருமலை கும்பிறுப்பிட்டியாப் பகுதியில் நேற்று குண்டுவீச்சு விமானங்கள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டன.

நேற்றுக் காலை இந்தப் பகுதியில் உள்ள காட்டுப் பிரதேசத்தில் இரு பொம்மர் விமானங்கள் பெருமளவு குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## மட்டு. வாகரையில் உணவுப் பொருள்களுக்கு இராணுவம் தடை

(மட்டுநகர்)

மட்டக்களப்பு, வாகரைப் பகுதியில் வசிக்கும் தமிழர்களுக்கு உணவு விநியோகம் செய்வதை இராணுவம் தடை செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 7-ந் திகதி முதல் இப்பகுதிக்கு உணவுப் பொருள்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் கொண்டுசெல்வதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

இப்பகுதிகளில் உள்ள கூட்டுறவுக் கடைகளுக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களை அங்கு கொண்டு செல்லவிடாததுடன், இக்கடைகளில் ஏற்கனவே இருந்த உணவுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர் நோக்கி மீண்டும் ஷெல் வீச்சு

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் யாழ் நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களையும், 50 கலிபர்

(4.ம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசுக்கு எதிராக கண்டனக் கூட்டங்கள்

(சென்னை)

அ. இ. அ. தி. மு. க. அரசின் நடவடிக்கைகளை கண்டித்து இம்மாதம் 29, 30-ந் திகதிகளில் கண்டனப் பொதுக்கூட்டங்களை நடாத்த தி. மு. க. தலைமையிலான தேசியமுன்னணியின் இடதுசாரி கூட்டமைப்பு தீர்மானித்

[4ம் பக்கம் பார்க்க]

## இந்தியாவிலிருந்து வந்த 99 தமிழ் குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில்

(மன்னார்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த 99 தமிழ்க் குடும்பங்கள் மன்னாரில் நிர்க்கதியாக விடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மடு அகதிகள் முகாமுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## ஆறு எம். பிக்கள் குறித்து உரிமைகள் குழு ஆராய்வு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் கடந்த 20-ந் திகதி புதன்கிழமை இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஆறு எம். பி.க்கள் நடந்துகொண்ட முறை குறித்து உரிமைகள் கமிட்டி ஆராயவிருக்கிறது.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகமது கடந்த 20-ந் திகதி புதன்கிழமை மாலை சபையில் இருந்து வெளியேறும்போது இவர்கள் புத்தகங்களை எறிந்தும் சத்தமிட்டும் முறைகேடாக நடந்து

(4ம் பக்கம் பார்க்க)

## ஏனைய தமிழ் குழுக்களையும் இந்தியா தடை செய்யுமா?

### - கருணாநிதி கேள்வி

(சென்னை)

''விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தது போல், இந்தியாவில் தற்போது தங்கியிருக்கும் மற்றைய ஈழத்தமிழ்ப் போராளி குழுக்களையும் இந்தியா தடை செய்யுமா? இதற்கான விளக்கத்தை மத்திய அரசு உடன் தெரியப்படுத்த வேண்டும்.''

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.

(4ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் களஞ்சியத்தில் உணவுப் பொருள்களை பாதுகாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் கடந்த ஒரு வாரமாக இடம்பெற்றுவந்த களஞ்சியப் பீடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்றுடன் முடிவடைந்தன. கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த ராஜபக்ஸ தலைமையிலான ஐந்துபேர் அடங்கிய குழுவினர் இந்த நடவடிக்கை

[4ம் பக்கம் பார்க்க]

## தடாசட்டத்தின்கீழ் கைதான புலிகள் ஆதரவாளர் விடுதலை

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டியதாக தடா சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட நெய்வேலியைச் சேர்ந்த அ[illegible]ணி எ[illegible]ரை இந்திய சிறப்பு நீதிமன்றம் நிபந்தனை ஜாமினில் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது.

இதேவேளையில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தடா சட்டம், விலைவாசி ஏற்றம், பத்திரிகை மீது அரசின் கடும் போக்கு ஆகியவை குறித்து பண்ருட்டி ராமச்சந்திரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## தெரிவுக் குழுவில் சு. க. கலந்துகொள்ளாது

(கொழும்பு)

இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இனிமேல் கலந்துகொள்ளப்போவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

மேற்படி தகவலை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட எம். பி. நிமல் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார். (சு)

## நோர்வே தொண்டர் குழு மேலதிக அரச அதிபர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

நோர்வே நாட்டுத் தொண்டர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நோர்வே பிரதிநிதிகள் மூவர் நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதனை சந்தித்து உரையாடினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

**நோவுவைத்தியம்**

ஒட்டகப்புலம் சமத்தர் நோவுஎண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரீ. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6256)

**விற்பனைக்கு**

''மலர்ந்தபூ மலர்வதில்லை மல்லிகைப்பூ சிவப்பதில்லை'', தமிழ்த் தென்றல் - யாதுமூரானின் கவிதைகள். விலை 20/-. எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (சி-6-31)

**அம்பாள் திருமண சேவை**

Lecturers, P. H. D Engineers, Bank Staff, G. S. ஆகியோருக்கு மணமக்கள் தேவை. ஞாயிறில் சந்திக்கவும். சின்னச்சாமிக்குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவிலடி, நல்லூர். (சி-6336)

**பரீட்சை**

(ஆண்டு 4, 5)

ஆண்டு 4 பரீட்சை 24-05-92 ஞாயிறு, ஆண்டு 5 பரீட்சை 07-06-92 ஞாயிறு மு. ப. 8-00, 11-00 நடைபெறும். பதிவு செய்யவும். ஆண்டு 5 Paper Class சனி, ஞாயிறு பி. ப. 4-30—6-00 நடைபெறும். வகுப்பு ஆரம்பம் 23-05-92. புதிய கல்வி நிலயம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6333)

**வகுப்புகள்**

ஆண்டு 4 முதல் ஆண்டு 9 வரை சகலபாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 9 ற்கு வர்த்தகமும் கற்பிக்கப்படுகிறது. ஆண்டு 5 புலமைப் பரிசில் Paper Class சனி, ஞாயிறு 4-30 — 6-00 நடைபெறுவுள்ளது. ஆரம்பம்: 23-05/92 சனி. புதிய கல்வி நிலயம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6332)

**சோபிதா**

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், பாடசாலைகளுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாள் சுடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

**வைத்திய சேவை**

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை முன்னாள் வைத்தியர் Dr. S. பாலச்சந்திரன் தனது சேவையை யாழ் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்துள்ளார். நேரம் பகல் 12 மணி—பி.ப 2 மணி வரையும் பி. ப. 4 மணி - பி. ப. 6 மணி வரையும். இளைய பிளாக் ரோட், சங்கானை. நேரம் மாலை 7மணி காலை 7 மணி வரையும். (சி 6318)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவிலில் நடைபெற்றுவரும் இலட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6-00 மணிக்கு செல்வன் ஸ்ரீ பிரசாந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும்.

கிரிக்கெட்:

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

'ஷப்ரு' கிண்ணத்துக்காக ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியின் கால் இறுதிச் சுற்றின் இன்றைய ஆட்டம்:

காலை 8-00 மணி: சென்ற் லோட்ஸ் (சொக்ஸ்) எதிர் மானிப்பாய் பரிஷ். பிற்பகல் 1-00 மணி: கொக்குவில் சீ. சீ. சீ. எதிர் ஜொனியன்ஸ். இப்போட்டிகள் யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும்.

## கலந்துரையாடல்

(சுன்னாகம்)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன பிரதிநிதிகள் புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுடன் காப்புறுதி சம்பந்தமாக நடாத்தும் கலந்துரையாடல் இன்று 23ம்திகதிசனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்படி கூட்டுறவுச்சங்க அலுவலக மண்டபத்தில் நடைபெறும். [101]

## நூலகங்கள் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை நடாத்தும் விடிவானந்தர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் மே 21, 26 ஆகிய இரு நாட்களும் யாழ். பொதுசன நூலகத்தின் அனைத்துக் கிளைகளும் மூடப்பட்டிருக்கும்.


## நிருபர்கள் தேவை

ஈழநாடு பத்திரிகையில் கடமையாற்ற கீழ்க் காணும் இடங்களுக்கு நிருபர்கள் தேவை.

| | |
|---|---|
| ★ நல்லூர் | ★ கோப்பாய் |
| ★ உரும்பிராய் | ★ கொடிகாமம் |
| ★ நீர்வேலி | ★ கைதடி |
| ★ நெல்லியடி | ★ மீசாலை |
| ★ சுன்னாகம் | ★ கோண்டாவில் |

★ விண்ணப்பதாரர் க. பொ. த. (சா) பரீட்சையில் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருக்கவேண்டும்.

★ ஆங்கில அறிவு அவசியம்.

★ வதிவிட அத்தாட்சிக்காக கிராமசேவையாளர் நற்சாட்சிப்பத்திரம் உட்பட இரு நற்சாட்சிப்பத்திர பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.

★ விண்ணப்பங்களை சொந்தக் கையெழுத்தில் 15-06-92க்கு முன்னர் நிர்வாகி, ஈழநாடு, த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். காரியாலய நேரத்தில் நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

நிர்வாகி

(ஏ-2156)


# யாழ். மாவட்டத்தில் 14தையற்பயிற்சிநிலையங்கள்

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழிலவிவாரியா கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் நடாத்தப்பட்டுவந்த தையல்பயிற்சி நிலையங்கள் விரைவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பதினொரு தொகுதிகளில் உள்ள நடாத்தப்பட்டு வந்த தையல் பயிற்சி நிலையங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒன்றாக அமைக்கப்படஇருப்பதால் இப்புதிய திட்டத்தின்கீழ் பதின்நான்கு தையல்பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும் இதனால் யாழ்ப்பாணமாவட்டத்துக்கு மூன்று புதிய தையல் பயிற்சி நிலயங்கள் ஆரம்பிக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாக தெரிய வருகிறது. [109]

# ''வீரர்களை சான்றோராக கருதுவது தமிழர் பண்பாடு''

[யாழ்ப்பாணம்]

இறந்தோரைக் கடவுளாக மதிப்பதும், வீரர்களை சான்றோராகக் கருதுவதும் பண்டைத் தமிழரின் பண்பாடாகும்'' இவ்வாறு 'யாதுமூரானின்' கவிதை வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவித்தார் வெளியீட்டு விழா நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெற்றது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலாலா சிறப்புரையாற்றுகையில்; ''புரட்சி மகனே எழுச்சி கொள்ளடா'' என்ற கவிதையில் உள்ளது போன்று [சமூகத்தின் சகல துறைகளில் [உள்ளோரும் எழுச்சிபெறவேண்டிய காலம் இன்றைய காலமாகும்'' என்றார்.

யாழ். கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம் யாழ். இந்து அதிபர் அ. பஞ்சலிங்கம், கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை, கவிஞர் சோ. பத்மநாதன், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோரும் நூல்பற்றி ஆய்வுரை செய்தார்கள். (க)

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சைக்கிள் திருட்டு தற்போது அதிகரித்துள்ளது.

லேடீஸ் சைக்கிள்களே கூடுதலாக திருடப்படுவுகின்றன. கோவில்கள், தேவாலயங்கள், சந்தைகள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் இடங்கள் உட்பட பொதுமக்கள் நெருக்கமாக நடமாடும் இடங்களிலேயே இத் திருட்டுச் சம்பவங்கள் தினமும் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றன.

இதேவேளை சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் விடப்பட்ட சைக்கிள்களும் பாடசாலைகளின் வளவுகளில் விடப்பட்ட சைக்கிள்களும் அவை மைக்காலங்களில் களவாடப்பட்டுள்ளன.

யாழ். நகரில் மூலைமுடுக்குகள் சைக்கிள் திருத்து நிலையங்கள் நாளுக்குநாள் அதிகரித்துவருவதையும் சைக்கிள் தரகர்கள் இப்பகுதிகளைச் சுற்றித் திரிந்து சைக்கிள்களுக்கு பேரம்பேசுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ( )

## இராசிபலன்

23 - 05 - 1992

சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி - 10)

ஸப்தமி முழுவதும், திருவோணம் முற்பகல் 11-03 வரை. மரணயோகம், இராகு காலம் காலை 8-52 முதல் 10-22 வரை. சுபநேரம் மாலை 2-52 முதல் 4-22 வரை.

மேடம்: தனவந்தர் உதவி, திறமைக்குப் பாராட்டு, குடும்ப சுகம்.

இடபம்: தன்னிலை இழப்பு, மறைமுகத் தொல்லை, செலவு.

மிதுனம்: மனதில் குழப்பம், தொழில் பாதிப்பு, வேறுபடு.

கடகம்: தொழில் முதலீடு, அதிக பிரயாசம், கடன் வசூல்.

சிங்கம்: பயணங்கள் அனுகூலம், மாதா உதவி, தானதர்மம்.

கன்னி: நிம்மதியின்மை, குடும்பக் கஷ்டம், யோசனை.

துலாம்: வாக்குப் பகை, உடல் சோர்வு, அகால போசனம்.

விருச்சிகம்: மனதுக்கினிய சம்பவம், பண வரவு, சகோதர உறவு.

தனுசு: கடும் எதிர்ப்பு, அடிமை நிலை, மனக் குமுறல்.

மகரம்: மேலதிகாரிகள் சகாயம், காரிய சித்தி, வெகுமதி.

கும்பம்: குடும்பச் செலவு, பணக் குறைவு, அலைச்சல்.

மீனம்: இடம் பெயர்வு, மன நிறைவு, வைத்தியச் செலவு.

— ஜோஸ்யர்

பனம்பொருள் கண்காட்சி

# கொழும்பில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் யூன் மாதம் 13ம், 14ம் திகதிகளில் பனம்பொருள் உற்பத்திக் கண்காட்சி ஒன்று கொழும்பில நடைபெறவிருக்கிறது.

இக்கண்காட்சிக்கான பொருட்களை யாழ்ப்பாணத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்க வாகன மூலம் கொழும்புக்கு அனுப்ப பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்து வருகிறது. வவுனியாவிலிருந்து இக்கண்காட்சிக்கான பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (123)

உணவு முத்திரையை

# உடன் பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கிராமசேவையாளர் பிரிவுகளிலும் தற்போது வறுமை நிவாரண உணவு முத்திரையும், குடும்ப அடையாள அட்டைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

உணவு முத்திரைகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் தத்தமது கிராமசேவையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அப்படி பெற்றுக்கொள்ளாதவர்கள் அடுத்த வாரம் புதன்கிழமை முதல் தமது புதிய உணவுமுத்திரைகளை யாழ். அரசாங்க அதிபர் பணிமனையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென்றும் கூறப்படுகின்றது. (ஸ்)

# 31ம்நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**கதிரமலை தயாபரன் [சுமந்திரன்]**

(ஆனைவிழுந்தான், தட்டுவன்கொட்டி)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 18-02-1972 | 23-04-1992 |

திதி: 23-05 1992

திதி நிர்ணய வெண்பா

ஆங்கிரஷ வருட அமரபட்ஷ சித்திரையில்
தாங்குபூ ராடசஷ்டி திதிதனில்—ஓங்குமெழில்
சுமந்திரன் தயாபரன் சுந்தர விளைஞன்
அமர்ந்தனன் எவனடிக் கீழ்.

மாண்டனன் மகி படைத்தோன்
மாபுவி கண்ணீர் மல்க
ஈண்டு நாம் அவற்கு வேண்டி
இரங்கியே வணங்கி நிற்போம்.

தாய், தந்தை, சகோதரங்கள், மைத்துனர்கள்.

தகவல்:
ஏ.மைத்துனர் சிவனடியான்,
கலைநகர்,
சித்தன்கேணி.

(சி-6335)

# "எமது விடுதலைப் போராட்டத்தினை இந்தியா அறவே விரும்பவில்லை

## ஆனாலும் விடாது போராடுகின்றோம்"

(யாழ்ப்பாணம்)

''எமது விடுதலைப்போராட்டத்தை இந்திய வல்லாதிக்கம் அறவே விரும்பவில்லை. ஆனாலும் நாம் விடாது போராடி வருகிறோம்''. இவ்வாறு முன்னாள் மன்னார்-யாழ். மாவட்டத் தளபதி லெப். கேர்ணல் ராதாவின் 5ம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

விடுதலை கிடைக்கும் வரை இந்த மண்ணிலே போராட்டம் தொடரும். எல்லை, வாழ்வு உறுதிப்படுத்தப்படும் வரையில் வீரச்சாவும் இடம் பெற்றே தீரும். இந்தவேளையில் போராளிகளைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும்.

போராட்ட ஆரம்பகாலத்திலிருந்து சிங்கள இராணுவ, அரசியல், நாசகார ரீதியில் போராட்டத்தை முறியடிக்கும் முயற்சி ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. இவற்றையெல்லாம் முறியடித்தே போராட்டம் இந்த மண்ணில் நடந்துகொண்டிருக்கிறது.

எம் போராட்டத்தை இந்திய வல்லாதிக்கம் அறவே விரும்பவில்லை.

இந்தியத் தலையீடு எங்கட்கும் ஒரு பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. காலத்திற்குக்காலம் பெரியளவில் நடவடிக்கை எடுத்தே வந்திருக்கிறோம்.

இந்தியா விடுதலைப்புலிகளை தடைசெய்தது விடுதலைஉணர்விற்கு மட்டும் விலங்கிடவில்லை. தமிழகத்தில் உள்ள விடுதலை உணர்விற்குப் போட்ட விலங்கு. விலங்கு ஒன்று போடப்படும்போது மக்கள் சக்தி அதனை உடைத்தெறியும்.

இந்தியாவின் போக்குத் தெரிகிறது இதனை நாம் சர்வதேச ரீதியாகப் பார்க்கவேண்டும். இன்று உலக அரங்கில் ஒரு புதிய உலகம் பிறந்திருக்கிறது.

இந்திய-அமெரிக்கக் கூட்டு எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது. இஸ்ரேலியரின் கூட்டைக்கூட இந்தியா நாடி இருக்கிறது. பழைய உலகம் இடிந்துகொண்டிருக்கிறது. புதிய உலகம் பிறந்துள்ளது.

தேசிய வளர்ச்சியை, உணர்வை யாராலும் அடக்கி விடமுடியாது; கட்டுப்படுத்தி விடமுடியாது. இது சர்வதேச சமூகத்திற்கும், மக்களுக்கும் தெரியும்.

எங்கள் மண்ணில் 20 வருடங்களாக போராட்டம் நடந்துவருகின்றது. இன்றுவரையில் 4500க்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமெய்தியுள்ளனர்.

இவர்களின் வீரச்சாவு மக்களின் சுதந்திரத்திற்கு பெரிய வளர்ச்சியைத் தந்திருக்கின்றது. போராளிகள் மக்களுக்காக வாழ்கின்றார்கள். அவர்கள் உயிர் கொடுக்கிறார்கள். மக்களின் சுதந்திரவாழ்வைப் பெற்றுத்தருவதற்காக போராடுகிறார்கள்.

உலகத்தில் விடுதலைக்காக போராடுகின்ற நாட்டிலே போரிட்டு இறந்த போராளிகளின்வீரமரணங்கள் விடுதலைக்குப் பின்னரே அவரவர் உறவினர்களுக்கு தெரியப்படுத்தப்படுகின்றன நாம் இம்மண்ணில் நடைபெறும் போர்களத்தில் வீரச்சாவை எய்தும் போராளிகளின் வீரமரணத்தை உறவினர்கட்கும், நாட்டிற்கும் உடனுக்குடன் தெரியப்படுத்துகிறோம்.

ஒரு போராளி வீரமரணம் எய்ததும்அடுத்தபோராளிஅவனது இடத்திலிருந்து தனது பங்கைச் செலுத்துகிறான்.

மாவீரர்கள் வரலாறுகள் வித்தியாசமானவை. உலகத்தில் இப்படியான வரலாற்றினை புரட்டிப்பார்க்க முடியாது. இப்படிப்பட்டவித்தியாசமான போராட்ட வரலாறு தமிழீழத்தில் ஏற்பட்டுவருகிறது.

நாம் யாருடைய கையேந்தலையும், அங்கீகாரத்தையும் கேட்டு நிற்கவில்லை. எங்கள் விடுதலைப்போராட்டம் மக்களை நம்பியே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எங்கள் தலைமை யாருடைய நோக்கத்திற்கும் கட்டுப்படாத தலைமையாகும். தலைவன் பிரபாகரனின் தலைமைத்துவத்தின்கீழ் எந்த நாட்டின் எதிர்பார்ப்புகளையும்எதிர்பார்காத நிலையில் போராட்டத்தை நடாத்திவருகிறோம்.

இன்று தமிழ்நாட்டில் விடுதலைக்காக குரல் கொடுத்த 12 000 பேரில் அறிஞர்கள், இலக்கியவாதிகள், விடுதலை விரும்பிகள் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர். நாங்கள் இந்திய வல்லாதிக்கத்தை எதிர்க்கிறோம். இந்திய மக்களை நாம் எதிர்க்கவில்லை

எங்கள் வீரர்கள் உயிர் கொடுத்து எங்களை அழிக்க கொண்டுவந்த ஆயுதங்களை எடுத்து எதிரியுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் மக்கள்மீது வேதனை குவியலாம் நெருக்கடி தொடரலாம். எங்கள் தேசம் அழியலாம். மக்கள்உடல்கள் துண்டு துண்டாக சிதறலாம். விடுதலையே நம்நோக்காக இறுதி வடிவமாக இருக்கவேண்டும். எம்தலைவனின்கீழ் நாம் ஒன்றுதிரண்டு போராடி எம் தேசத்தை விடுவிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

(56)

---

# தமிழ் முன்னேற்றத்திற்காக விபுலானந்தர் துறவு பூண்டவர்

(சென்னை)

தமிழ்மொழியின முன்னேற்றத்திற்காக விபுலானந்தர் துறவறம் பூண்டவர் என்று உலகத் தமிழர் மாமன்ற தலைவர் டாக்டர் டேவிட் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற விபுலானந்த அடிகள் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

''ஈழத்தில் பிறந்த விபுலானந்தர் தமிழ்த் தொண்டு ஆற்றுவதற்காக தமிழ்நாட்டிற்கு வந்தவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் துறைக்கு பொறுப்பேற்ற முதல் பேராசிரியர். தமிழை மேம்படுத்த இவர் அரும் பெரும் தொண்டுகளை ஆற்றியுள்ளார். தமிழ் முன்னேற்றத்திற்காக விபுலானந்தர் துறவறம் பூண்டவர்.

விழாவில் யோகநாதன் எழுதிய 'இன்றும் கேட்கும் குரல் விபுலானநதர்' என்ற நூலை வெளியிட்டு சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சாதிக் பேசுகையில்,

அடிகளார் தமிழுக்கு அரும் பெரும் தொண்டாற்றியுள்ளார். அறிவியலையும் பொறியியலையும தமிழோடு இணைத்து, கலைச் சொற்களை தந்தவர் நம் நாட்டை ஆங்கிலேயன் ஆட்சிசெய்த காலத்திலேயே தன் வீட்டின் முன் இந்திய தேசியக் கொடியை வீரத்துடன் பறக்கவிட்டவர் விபுலானந்தர் என்று சாதிக் கூறினார்.

அண்ணாமலை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிட்டிபாபு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ரத்தினம் ஆகியோரும் பேசினர். (ரி)

---

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ப நோ. கூ. சங்கங்களினதும், தெங்கு பனம்பொருள். உ. வி. கூ சங் சங்களினதும் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிககு யாழ் கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களை தவறாது சமூகம் கொடுக்கும்படி யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர் (வி)

---

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம் நடாத்தும் வருடாந்த யாழ். மாவட்டப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி யூன் மாதம் 8-ம், 9-ம் திகதிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்வார்.

இப்போட்டியில் கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெற்ற 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் போட்டியாளர்கள் கலந்து கொள்வார்கள்.

---

# ரஜினிகாந்தை அரசியலுக்கு இழுக்க இ. காங்கிரஸ் தீவிர முயற்சி

(சென்னை)

சினிமா நடிகர் ரஜினிகாந்தை அரசியலுக்குள் இழுக்க ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்கள் சிலர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுவருகின்றார்கள். வாழப்பாடி ராமமூர்த்தி கோஷ்டி, மூப்பனார் கோஷ்டி என பிளவுபட்டு நிற்கும் தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியின், மூப்பனார் கோஷ்டியில் ரஜனிகாந்தை இணைத்து விடுவதன் மூலம் வாழப்பாடிக்கோஷ்டிக்கும் அ. தி. மு. க. வுக்கும் இருக்கும் செல்வாக்கை உடைத்து விடமுடியும் என்ற நம்பிக்கையின் பேரிலேயே ரஜனிகாந்தை அரசியலுக்குள் இழுக்கும் முயற்சி நடைபெற்றுவருகிறது.

இந்திரா காங்கிரஸ் உயர் மட்டத் தலைவர்களின் இந்தத் திட்டம் பற்றிய இந்தச் செய்தியை, இந்திய புலனாய்வுத்துறையும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

இந்தச் செய்தி குறித்துக் கருத்து தெரிவித்த ரஜனிகாந்த் இது பற்றி தனக்கு எதுவும் தெரியாது. புலனாய்வுத்துறை தெரிவித்த தகவல் தொடர்பாக தான் எதுவும் கூறவிரும்பவில்லை, என்று கூறியுள்ளார். இதே ரஜனியை காங்கிரஸில் இணைப்பதற்குத் தீவிரமுயற்சி மேற்கொள்ளப் படுவது உண்மைதான் என தென்னிந்திய சினிமா வட்டாரமும் தெரிவித்துள்ளது.

அ. தி. மு. க. காங்கிரஸ் உறவில் அண்மைக்காலமாக விரிசல் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றது. இதேவேளை, காங்கிரசை மேலும் ஒதுக்குவதற்கு முதல்வர் ஜெயலலிதாவும் முயற்சி செய்து வருகின்றார். ஜெயலலிதாவின் செல்வாக்கைக் குறைப்பதற்கு மறுபுறத்தில் காங்கிரஸ்கட்சியினர் உயர் மட்டத்தில் தீவிர முயற்சி செய்து வருகின்றனர். ஜெயலலிதாவுக்கு எதிரான சக்தியாக ரஜனிகாந்தைத் தயார் செய்வது தான் காங்கிரஸின் முழு நோக்கமும் கூட. இந்தத் திட்டம் குறித்து தமிழ்நாடு காங்கிரஸிலும், அகில இந்திய காங்கிரஸிலும் ஆராயபட்டு தீர்க்கமான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. (வ்)

---

# ஓய்வுபெறும் அதிபருக்கு இன்று சேவைநலம்பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாசாலை முன்னாள் அதிபர் திரு. சு. சிவவாகீசரின் சேவை நலம் பாராட்டு விழா இன்று பிற்பகல் 2-00 மணியளவில் மேற்படி பாடசாலையில் நடைபெறும்.

பாராட்டுரைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் 'மயில்' நாடகமும், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து அகில இலங்கைக் கம்பன் கழகத்தினரின் 'பட்டி மண்டபம்' திரு. இ. ஜெபராஜ் தலைமையில் நடைபெறும். இதையடுத்து கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் 'கவியரங்கம்' நடைபெறும். இதில் கவிஞர் இளம் பாவலன், பண்டிதர் கடம்பேஸ்வரன், கவிஞர் ஜெ. கி. ஜெயசீலன், கவிஞர் நாவண்ணன், கவிஞர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் பங்குபற்றுவர். (சி)

---

# கிரிக்கெட்: பாகிஸ்தான் தோல்வி

(லண்டன்)

இங்கிலாந்து - பாகிஸ்தானிடையே லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 1வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில்பாகிஸ்தான் அணி 79 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து 55 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 278. பாகிஸ்தான் 51. 3 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 193 ஓட்டங்களை மட்டுமேபெற்றது. (சி)

---

# ஊவா மாகாணத்துடன் அம்பாறையை இணைக்கும் யோசனைக்கு கண்டனம்

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தை ஊவா மாகாணத்துடன் இணைப்பது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ள யோசனையை அம்பாறை தமிழர் மகாசங்கம் கண்டித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தை ஊவா மாகாணத்துடன் இணைத்துவிட்டுஎஞ்சியவடக்கு கிழக்குப் பகுதியை இணைப்பதற்கான யோசனையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி கடந்த ஏப்ரலில் முன்வைந்தது.

தமிழரின் நிலத்தை பகிரங்கமாக ராஜதந்திர முறையில் அபகரிக்கும் இந்த யோசனையைக் கண்டித்து அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (ரி)

---

# வற்றுப்பளை கண்ணகை ஆலய ஷெல் தாக்குதலுக்குபலத்த கண்டனம்

(சாவகச்சேரி)

வன்னிராச்சியத்தின் சிகரமென வர்ணிக்கப்படும் ஈழத்தின் சக்தி பீடங்களில் முதன்மை வாய்ந்ததும் தமிழ் தெய்வமுமாகிய வற்றுப்பளை கண்ணகை அம்பாள் ஆலய பொங்கல் விழாவின்போது நடைபெற்ற ஷெல் தாக்குதல் வேதனைக்குரியதும் கண்டனத்திற்குரியதுமாகும். இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறாதிருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அரசும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றிய ஆணையாளர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் ஒன்றியத்தின் விசேட கூட்டத்தில்தெரிவித்தார். இக்கூட்டத்தில் இச்செயற்குழுவினால் கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்து கலாச்சார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சுக்கு உடன் அனுப்பிவைக்கப்பட்டது. சம்பவத்தின்போது ஆலய சூழலில் மரணமானவர்களின் குடும்பங்களுக்கும் கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. (155)

# ராஜீவ் கொலைவழக்கு யூன் 3ல் ஆரம்பம்

[சென்னை]

திரு. ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை எதிர் வரும் 3-ம் திகதி சென்னையில் ஆரம்பமாகும்.

தற்போது குற்றம் சாட்டப்பட்டு தடுப்புக் காவலிலுள்ள சந்தேக நபர்கள் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

இவர்களுக்கு எதிராகத் தனித்தனியான குற்றப்பத்திரம் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

# 2000-ஆண்டில் 4 கோடி பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படுவர்

[லண்டன்]

இரண்டாயிரம் ஆண்டு தொடக்கத்தில் உலகத்தில் 4 கோடி மக்கள் 'எயிட்ஸ்' நோயின் பாதிப்புக்குள்ளாவர்கள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

தற்போது 75 வீதமான நோயாளர் மூன்றாம் உலக நாடுகளில் வாழ்வதாகவும், இதனைக் கட்டுப்படுத்த சர்வதேச உலக ஸ்தாபனம் ஆதார பூர்வமாமான நடவடிக்கைகளை எடுந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கே]

# போட்டிப் பரீட்சை

[கொழும்பு]

அரச சேவை, மாகாண சேவை, கூட்டுத்தாபனங்களுக்கு ஊழியர்களைத் திரட்டும் விதத்தில் போட்டிப் பரீட்சை நடாத்திப் புள்ளிகளை வெளியிடும்படி அரச பரீட்சை ஆணையாளர் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளது. [மா]

# வலைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரை இறுதிப்போட்டிகள் இன்று சனிக்கிழமை யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவிருக்கும் இரண்டாவது போட்டியில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து நவாலி முரசொலி அணி ஆடவுள்ளது.

பிற்பகல் 3-00 மணிக்கு இடம்பெற உள்ள முதலாவது போட்டியில் தெல்லிப்பளை கிருஸ் கொப்பர்ஸ் அணியை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனீஸ் ஆடவுள்ளது.

# வீதி விபத்துக்களை தடுக்க உதவுமாறு தமிழீழ காவல்துறை வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

கடந்த சில நாட்களாக குடாநாட்டின் சாவகச்சேரி, சுன்னாகம், யாழ். நகர் ஆகிய பகுதிகளில் வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன. அநியாயமான உயிரிழப்புகளும், பொருள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. தமிழீழ காவல் துறையின் நகரப்போக்குவரத்துப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விபத்துக்களுக்கான காரணங்களைக் கண்நோக்கியபோது பின்வரும் காரணங்கள் விபத்துகளுக்குக் காரணமாக உள்ளன.

பக்கம் பக்கமாகத் துவிச்சக்கர வண்டிகளை செலுத்திக் கொண்டு போவதால். இவ்வாறு போகும்போது வண்டியின் ஒட்டுனர்கள் தமக்குள் பல்வேறுபட்ட கதைகளைக் கதைத்த வண்ணம் செல்கின்றனர். இவர்களது முழுக்கவனமும் தமது பயணத்தை மறந்து கதையிலேயே செலுத்தப்படுகின்றது. இந்நிலையில் முன்னாலோ, பின்னாலோ வாகனங்கள் வந்தால், அவற்றைப் புரிந்து கொள்ளவதற்குச் சிறிது நேரம் எடுக்கின்றது. இதற்குள் விபத்துக்கள் ஏற்பட்டு இழப்புகளைச் சந்திக்கின்றோம்.

வாகனங்களை பிறேக்-வெளிச்சம் என்பன. இலாமல் பகலிலும், இரவிலும் செலுத்துவதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

துவிச்சக்கரவண்டிகளில் அளவுக்கதிகமான சுமைகளை ஏற்றி அபாயகரமான முறையில் வீதிவழியே செலுத்துவதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மினிபஸ்களில் பயணம் செய்யும்போது மிதிபலகையில் நின்றபடி பயணம் செய்வதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மோட்டார்சைக்கிள்களில் செல்லும்போது இன்னொரு மோட்டார் சைக்கிளுடனோ அல்லது துவிச்சக்கரவண்டியுடனோ சமாந்தரமாகச் செல்லுதல், கைகொடுத்து இழுத்துச் செல்லுதல், இவையும் விபத்துக்குக் காரணமாகும்.

அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றிச் செல்லுதல்,

இவ்விழப்புக்களைத் தவிப்பதற்கு தமிழீழ காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவினரால் நடைமுறைப் படுத்தப்படும் வீதியொழுங்கு முறைகளை கடைப்பிடித்து ஒழுகுமாறு தமிழீழ காவல் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

### தமிழக அரசுக்கு
[1ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது.

தி. மு. க தலைவர் திரு. மு கருணாநிதி நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். [க]

### ஆறு எம். பிக்கள்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டதாக மேற்படி கட்சியைச் சேர்ந்த ஆறு எம். பிக்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (மா)

### காங்கேசன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் கடந்த ஒருவாரமாக ஈடுபட்டுவந்தனா.

களஞ்சியப் பீடைகளை கட்டுப்படுத்துவதற்கான விசேட இரசாயன முறைக்கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருள்கள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (மா)

### நோர்வே
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் உணவு போஷாக்கு சம்பந்தமாகவும் வேறுவிடயங்கள் தொடர்பாகவும் இவர்களிடம் மேலதிக அரச அதிபர் எடுத்துக் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது. [மா]

# நிலத்துக்கடியில் சீனாவின் அணுசக்தி பரீட்சை

[பீக்கிங்]

நிலத்துக்கடியில் பாரிய அணுசக்திப் பரீட்சை ஒன்றைச் சீனா நடாத்தியுள்ளது.

மேற்படி பரீட்சையை அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகள் கண்டித்துள்ளன. சீனாவின் இந்தப் பரீட்சை சர்வதேச உச்ச வரம்பைக் காட்டிலும் ஆறு அல்லது ஏழு மடங்கு அதிகமானதென அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது. (வி)

### புலிகள் தடை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக இலங்கை பத்திரிகைக்கு இந்திய தூதுவர் வழங்கிய பேட்டியில் இலங்கைப் பிரதமர் இந்தியாவின் செயற்பாடுகள் குறித்து தவறாக புரிந்துகொண்டிருப்பது குறித்து தாம் பெரிதும் வருந்துவதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசு தடைவிதித்திருப்பது ஓர் அடையாள நடவடிக்கையென பத்திரிகைகளை மேற்கோள்காட்டி இலங்கைப் பிரதமர் டி. பி. விஜேதுங்க நாடாளுமன்றில் உரையாற்றியதையும் இந்தியா கடுமையாக குறைகூறியுள்ளது. (க)

# 3000 பஸ்களை அரசு இறக்குமதி செய்யும்

(கொழும்பு)

போக்குவரத்து அமைச்சு அடுத்த இரு வருடங்களில் 3,000 பஸ்களை தருவிக்கவுள்ளதாகவும் இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: கொள்வனவு செய்யப்படும் பஸ்கள் தனியார்துறையினருக்கு இலகுகடன் அடிப்படையில் வழங்கப்படும் புதிய பஸ்கள் தருவிக்கப்பட்டதும் போக்குவரத்துச் சேவை முன்னேற்றமடையும்.

தற்போது 16,000 பஸ்கள் தனியார்துறையினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மக்கள் பயப்படுத்தப்பட கம்பனிகள் 4,000 பஸ்களை சேவையில் ஈடுபடுத்திவருகின்றனர்.

# சுவிஸ் பிரஜை புலிகளுக்கு பயிற்சி அளிக்க வந்தவரா?
## விசேட பணியகம் ஆராய்வு

(கொழும்பு)

ஜா எல எச்கலையில் ஆயுதங்களுடன் பிடிபட்ட சுவீஸ்லாந்து நாட்டு பிரஜை புலிகளுக்கு பயிற்சி அளிக்க வந்தவரா என்று விசேட நடவடிக்கை பணியகம் ஆராய்ந்து வருகிறது.

40 வயதான இந்த சுவீஸ் பிரஜையின் உடலில் பல காயங்கள் காணப்படுகின்றன. 1976-ம் ஆண்டு லெபனானில் முஸ்லிம்களுக்கு எதிராக கிறிஸ்தவப்படையில் சேர்ந்து போராடியதாகவும் லெபனானில் இலங்கைப் போராளிகளை சந்தித்ததாகவும் கூறப்படுகிறது. (மா)

### வற்றுப்பளை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின்போது 23 பேர் கொல்லப்பட்டதாகவும், சுமார் நாற்பது பேர் வரை படுகாயமடைந்ததாகவும் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வானந்தா தீபிகா விருது பெற்றனர்

[கொழும்பு]

மேல்மாகாணஆளுநர் திரு. எஸ்.சர்வானந்தா விளையாட்டு வீராங்கனை தீபிகா சண்முகம் உட்பட 65 பேருக்கு ஜனாதிபதியினால் தேசிய விருதுகள் நேற்றுவழங்கப்பட்டன (க)

### இந்தியாவும் இலங்கையும்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வையாகும்.

இந்தியாவில், விடுதலைப் புலிகளைத் தடை செய்ததை, இலங்கை அவ்வளவாக விரும்பவில்லை என்பதையே இலங்கைப் பிரதமரின் கூற்று சுட்டிக் காட்டுவதாக வெளிநாட்டுச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. [வி]

### ஏனைய தமிழ் குழுக்களை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மு. கருணாநிதி. இந்திய மத்திய அரசிடம் கேட்டுள்ளார்.

இலங்கையில் தனித் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்திய ஈ. பி. ஆர். எல். எப். தலைவரும், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான திரு. வரதராஜப் பெருமாளும் தற்போது இந்தியாவில்தான் இருக்கிறார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக ஒழித்துவிட்டேன் என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்னர் கூறியுள்ளார். அப்படியானால், இந்தியாவில் இல்லாத ஒரு இயக்கத்தை எப்படி தடைசெய்ய முடியும்? எனவும் திரு.கருணாநிதி கேட்டுள்ளார். (வி)

### இந்தியாவிலிருந்து
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்ட இக்குடும்பங்களை, மடு அகதிகள் முகாம் நிர்வாகிகள் இடவசதியின்மையால் பொறுப்பேற்க மறுத்ததினால் இவர்கள் இப்பகுதியில் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு உடனடியாக வேண்டிய உதவிகளை செய்யும்படி பல தொண்டர் ஸ்தாபனங்கள், மன்னார் அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### மட்டு. வாகரையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களையும் இராணுவம் எடுத்துச் சென்றுள்ளது.

மேலும் இப்பகுதிகளுக்கான கிராமசேவையாளர்களை அங்கு செல்லத் தடை விதித்ததுடன் அங்கிருந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தையும் இராணுவம் சேதப்படுத்தியுள்ளதாகவும், இதனால் அங்குள்ள தமிழ் மக்கள் உணவேதுமின்றிக் கஷ்டப்படுவதுடன் வெளி இடங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் துன்புறுத்தப்பட்டு தாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வி]

### யாழ். நகர்
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

நேற்று பிற்பகல் மூன்று மணி தொடக்கம் மண்டைதீவுப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் யாழ்நகர் கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்.

இராணுவத்தினர் ஏவிய ஷெல் குண்டுகள் பண்ணை, கொட்டடி, நாவாந்துறை கரையோரப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதேநேரம் 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டதினால் இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பெரும் பீதிக்குள்ளானார்கள்.

இராணுவத்தினரின் மேற்படி தாக்குதல்கள் நேற்றிரவு 7-30மணிவரை நீடித்தது குறிப்பிடத்தக்கது. (வி)

# மரண அறிவித்தல்

## பொன்னையா இரத்தினம்

[இளைப்பாறிய அதிபர் - அராலி இந்துக் கல்லூரி, கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயம்]

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை இரத்தினம் அவனியூவை வதிவிடமாகவும் கொண்ட திரு. பொன்னையா இரத்தினம் அவர்கள் காலமானார். அன்னார் பரமரத்தினத்தின் அன்புக் கணவரும், Dr ஜெயரத்தினம் [U. K], விஜயரத்தினம் [இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளை], இரத்தினேஸ்வரி, ஜவகரத்தினம் [U. K.], கோபாலரத்தினம் [U K.], இரத்தினம்பிகை [உருத்திரபுரம் மகாவித்தியாலயம்], இரத்தினவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகாம்பிகை, இந்திரா, துரைராசா [இலங்கை வங்கி, மானிப்பாய்], சாரதாதேவி, ரோகினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். ஈமக்கிரியைகள் [23-05-92] இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்;

Dr. பொ. நடராசா
[சகோதரன்]

859A, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி 6338)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81